O.S. 60/2022

சார்பு நீதிமன்றம், விருதுநகர்

நாள்:05.03.2025

PW1: பார்த்திபன் த/பெ– பாலசுப்பிரமணியம்

**<u>சாட்சி வேண்டுக்கோளின் பேரில் திரும்ப அழைக்கப்பட்டு முதல் விசாரணை தொடர்ச்சி–</u>**

வா.சா.ஆ.1 ஆவணத்தின் அசல் **வா.சா.ஆ.8** ஆக தாக்கல் செய்கிறேன்.

**<u>பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை-</u>**

நான் சரக்கு கப்பலில் செக்யூரிட்டியாக வேலை செய்கிறேன். எனக்கு வயது 47. எனது தகப்பனார் ஏற்கனவே தாவா சொத்து சம்மந்தமாக விருதுநகர், மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் அ.வ.எண்.153/2012 தாக்கல் செய்துள்ளார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. அந்த தீர்ப்பாணை நகலை நான் தாக்கல் செய்துள்ளேன். அ.வ.எண்.153/2012 வழக்கின் பிராது சார்பு நகல் தற்போது என்னிடம் காட்டப்படுவது தான். அது **பி.வா.சா.ஆ.1**. எனது தாயாருக்கு வயது 70. எனது சகோதரிக்கு 50 வயது. அ.வ.எண்.153/2012 வழக்கு எதற்காக தாக்கல்செய்யப்பட்டுள்ளது என்ற விவரம் எனக்கு தெரியும். அந்த வழக்கில் கேட்டுள்ள பரிகாரத்தை தான் இந்த வழக்கில் கேட்டுள்ளேன் என்றால் சரிதான். 07.11.2014ம் தேதியில் அ.வ.எண்.153/2012 வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டது என்றால் சரிதான். எனது தகப்பனார் 27.07.2020ல் காலமானார். வழக்கு தள்ளுபடியான பின்னர் அவர் இறக்கும் வரை மேற்படி வழககை மீண்டும் கோப்பிற்கு எடுக்க மனு செய்யவில்லை என்றால் அவர் உடல்நிலை சரியில்லாமல் படுத்த

படுக்கையாக இருந்தார். அவர் உடல்நிலை சரியில்லாததற்கான ஆவணத்தை வழக்கில் தாக்கல் செய்யவில்லை. அ.வ.எண்.153/2012 தாக்கல் செய்த வழக்கறிஞரும், இந்த வழக்கின் எனது வழக்கறிஞரும் ஒரே நபர் தான். இரண்டு வழக்குகளிலும் ஒரே பரிகாரத்தை கேட்டுள்ளதால் அதற்கான காரணத்தை பிராதில் சொல்லவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.1, வா.சா.ஆ.8 ன் மூல ஆவணங்களை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். எனது தகப்பனார் ஆறுமுகம் பெயரில் பட்டா உள்ளதாக சொல்லவில்லை. எனது பிராதில் தாவா சொத்து வாய்மொழியாக ஆறுமுகத்திற்கு கிடைத்தது என்று சொல்லியுள்ளதற்கு ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை. ஆறுமுகமும், பொன்மலையும் பாகம் பிரித்து கொண்டதற்கான ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை. தாவா சொத்திற்கான பட்டா அனைத்தும் பொன்மலை என்பவரின் பெயரில் தான் உள்ளது என்றால் சரிதான். எனது தகப்பனார் ஆறுமுகம் என்பவரிடம் 12.10.1989 ல் எந்தவித கிரையமும் வாங்கவில்லை என்றும், வா.சா.ஆ.1, வா.சா.ஆ.8 எழுதிக்கொடுக்கவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. தாவா சொத்தை நான் அனுபவம் செய்து வருவதற்கு வருவாய் துறை ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். தாவா சொத்தை 1996 ல் கூட்டுறவு வங்கியில் அடமானம் வைத்ததற்கு ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.2 ன் படி பொன்மலை என்பவர் ஆண்டித்தேவருக்கு எந்த விற்பனையும் செய்யவில்லை என்றால் சரியல்ல. அவ்வாறு விற்பனை செய்திருந்தால் ஆண்டித்தேவர் அல்லது எனது தகப்பனார் பெயருக்கு பட்டா மாற்றம் ஏற்பட்டிருக்கும் என்றும், அவர் அவ்வாறு விற்காததால் தற்போது வரை பொன்மலை பெயரில் தான் பட்டா உள்ளது என்றால் சரியல்ல. தாவா சொத்து 1 ம் பிரதிவாதிக்கு தாவா சொத்து உரிமை என்பதால் , 2 ம் பிரதிவாதிக்கு 23.11.2011 ம் தேதியன்று

தானசெட்டில்மெண்ட் எழுதிக்கொடுத்துள்ளார் என்றும், அது சட்டப்படியானது என்றும் சொன்னால் சரியல்ல. மேற்படி தானசெட்டில்மெண்ட் ஆவணம் இவ்வழக்கில் தாக்கல் செய்யவில்லை. எனது தகப்பனார் வாங்கியது பொய்யான ஆவணம் என்பதால் எனது தகப்பனார் உயிருடன் இருக்கும் வரை பட்டா மாற்ற முயற்சி செய்யவில்லை என்றால் சரியல்ல. தற்போது வரை பட்டா மாற்ற நானோ, எனது தகப்பனாரோ எந்த முயற்சியும் செய்யவில்லை என்றால் சரிதான். 23.11.2011 ல் எழுதப்பட்ட தானசெட்டில்மெண்ட் பற்றி எனது தகப்பனார் இறந்த பிறகு எனக்கு தெரியும். எனது தகப்பனார் தாக்கல் செய்த வழக்கின் தீர்ப்பு என்னை கட்டுப்படுத்தும் என்றால் சரிதான். எனது தகப்பனார் தாக்கல் செய்த ஏற்கனவே தள்ளுபடியான வழக்கினை மீண்டும் நான் நடத்துவதற்கு முயற்சி செய்தேனா என்றால் இந்த வழக்கை தாக்கல்செய்துள்ளேன். 2 ம் பிரதிவாதி, 3 ம் பிரதிவாதிக்கு தாவா சொத்தினை விற்பனை செய்த பத்திரம் செல்லாது என்று பரிகாரம் கேட்டுள்ளேன். நான் கோரியுள்ள பரிகாரங்கள் கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. ஆறுமுகம் என்பவரை வழக்கில் சேர்க்கவில்லை என்றும், அவர் அவசிய தரப்பினர் என்றும் எதிர்வழக்குரையில் சொல்லியுள்ள விபரம் தெரியும். ஆறுமுகம் என்பவரை வழக்கில் தரப்பினராக சேர்த்தால் வழக்கின் உண்மை தெரியவரும் என்றால் சரியல்ல. நான் வழக்கை சுமார் 11 வருடம் கழித்து தாக்கல் செய்ததால் வழக்கு காலாவதி தோஷத்தினால் பாதிக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. நான் வழக்கு தாக்கல் செய்யமுடியாது என்றும், எனது தகப்பனார் தாக்கல் செய்துள்ள அ.வ.எண்.153/2012 ஐ நடத்த வேண்டும் என்று சொன்னால் சரியல்ல. தாவா சொத்து பிரதிவாதிகளுக்கு பாத்தியப்பட்டது என்றால் சரியல்ல. எனது வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல.